**சிறப்பு நீதிமன்றம் எண்.2 (LAOP) , ஜெயங்கொண்டம்,**
**முன்னிலை : திரு.V. பிரேம்குமார், B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP), ஜெயங்கொண்டம்.**
**2026 ம் வருடம் ஆகஸ்ட் 17 ஆம் தேதி திங்கள்கிழமை**
**அசல் வழக்கு எண்.134/2021**
**(ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.94/2021)**
**TNAL 06-000541-2021**

பரமேஸ்வரி ... வாதி

//எதிர்//

1. பாலாஜி
2. செங்குட்டுவன்
3. மாவட்ட ஆட்சியர், அரியலூர்
4. வருவாய் வட்டாட்சியர், ஜெயங்கொண்டம் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 17.08.2026 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்களும் 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பழனிமுத்து அவர்களும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகவும் அறிவிக்கப்பட்டு இருந்து வந்துள்ள நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

தாவா B ஷெட்யூல் சொத்து வாதிக்கு உரிமையுடையது என முதல் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்ய வேண்டியும், அதன் தொடர்பரிகாரமாக முதல் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ B ஷெட்யூல் சொத்தில் வாதியின் அனுபவத்தில் எவ்வித இடையூம் இடைஞ்சலும் செய்யாமலும் அத்துமீறி பிரவேசிக்காமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா C ஷெட்யூல் சொத்து வாதிக்கு உரிமையுடையது என 2ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்ய வேண்டியும், அதன் தொடர்பரிகாரமாக முதல் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ தாவா C ஷெட்யூல் சொத்தில் வாதியின்

அனுபவத்தில் எவ்வித இடையூறும் இடைஞ்சலும் செய்யாமலும் அத்துமீறி பிரவேசிக்காமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்துகளில் ( A ஷெட்யூல், B ஷெட்யூல், C ஷெட்யூல் ) வாதியின் அனுபவம் மற்றும் சுவாதினத்தை அனுசரித்து வருவாய் ஆவணங்களான பட்டா, அடங்கல் FMB ஆகியவற்றில் உரிய திருத்தங்கள் செய்ய செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், சமூகம் கோர்ட்டார் அவர்கள் தம்யுக்தமாய் கருதும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கி வாதிக்கு சாதகமான தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கிட வேண்டி வாதி பிரார்த்திக்கின்றார்.

Plaintiff called absent suit is posted for special list of August month. Plaintiff not turn up to proceed the Trail. Hence this suit is dismissed for default.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ஆம் நாளன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்படுகிறது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2(LAOP),
ஜெயங்கொண்டம்.